1969 மார்ச் 5]

கள் 72,546, ஐந்து எக்கருக்கு மேல் 12½ எக்கர் வரை உள்ளவர்கள் 56,343 12½ ஏக்கருக்குமேல் வைத்திருப்பவர்கள் 11,997 பேர்கள். முப்பது முப்பத்தைந்து லட்சம் ஜனத்தொகை உள்ள தஞ்சை மாவட்டத்தில், பெரிய நிலக் கிளர்ச்சிகள் நடக்கிற தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 9½ லட்சம் பேர்கள் ஏதோ ஒரு நிலத்திற்கு சொந்தக்காரராக இருக்கிறார்கள். கூட்டுறவு முறை என்பது கொஞ்சம் நடைமுறைப்படுத்தப்பட்டு சரியாக அமையவில்லை, நமக்கு என்று பிரத்தியேக நிலைமை இருக்கிறது. ஆகவே பிரத்தியேக முறையில்தான் நாம் நிலக் கொள்கைகளை, நிலச்சீர்திருத்தகொள்கைகளை உருவாக்க வேண்டும்.

Hosur taluk as Hill Station

* 171 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether there is any proposal to declare Hosur taluk as a hill station and give hill allowance to Government servants; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை ஐயா

(ஆ) எழவில்லை.

அரிசி வினியோகம் செய்ய சில்லரை வியாபாரிகள்

172 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உணவு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ரேஷன் கார்டு முறையில் அரிசி வினியோகம் செய்ய சிறிய கடைக்காரர்களுக்கு அனுமதி வழங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) இல்லை எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) and (இ) சட்டபூர்வமான பங்கீட்டு முறையும் குடும்பக் கார்டு முறையும் செயலிலுள்ள பகுதிகளில், அரிசி உட்பட கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள்களை வழங்கும் பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர, சிறிய கடைக்காரர்களும் சில்லறை வியாபாரிகளாக நியமிக்கப்படுகின்றனர். ஆயினும், அவர்களது நிதி வசதி நிலைமையையும், நற்பெயரையும் கருத்தில் கொண்டு, அவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

திரு. வை. சுவாமிநாதன் : பொன்மலைபோன்ற பகுதிகளில் பெரிய கடைகளுக்குத்தான் அரிசி, சர்க்கரை போன்றவை கொடுக்கப்படுகின்றன. அங்கு கிட்டத்தட்ட ஐயாயிரம் மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். ஆகவே, சிறிய கடைகளுக்கு அனுமதி கொடுத்தால், அரிசி வினியோகம் செய்வதற்கு சுலபமாகயிருக்கும். ஆகவே இதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : லைசென்ஸ் வழங்கும்போது குறிப்பாக கூட்டுறவு சங்கங்களுக்கும், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பர்மா சிலோன் அகதிகளுக்கும் முக்கியமாக வழங்கப்படுகிறது. மற்ற சில்லறைவியாபாரிகள் அவர்களுடைய நிதிநிலைமை, நாணயம் முதலியவற்றைக் கருத்தில்கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த ரேஷன் கடையைப்பற்றி அங்கு ஏதாவது தவறு ஏற்பட்டு இருந்தால், அதைத் தெரிவித்தால் அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். வரதராஜன் : குடும்பக் கார்ட் நம்மால் கொடுக்க முடியாத சில முக்கியமான நகரங்களில், போக்குவரத்தில் அரிசி கொண்டுபோக முடியாது என்ற ஊர்களில் அரிசி நெருக்கடி அதிகமாக